பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 17 ஞாயிற்றுக்கிழமை 31.01.2022 கதிர் 313

## ஊடகவியலாளர் மீது குண்டர் குழு தாக்குதல்

யாழ்., சாவகச்சேரி, கச்சாய் வீதிப் பகுதியில் மின்சார சபையை அண்மித்த இடத்தில் இன்று மதியம் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற ஊடகவியலாளர் மீது வானில் வந்தோர் தாக்குதல் நடத்தி விட்டு தப்பித்துச் சென்றுள்ளனர் என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

2




## நீதி கோரி யாழில் இன்று போராட்டம்

(இ.கலையமுதன்)

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமை, தாக்கப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுத்து, நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணம் நகரில் இன்று 'கறுப்பு ஜனவரி' கவனயீர்ப்புப் போராட்டம்

2

# யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்த 43 இந்திய மீனவர்களுக்குக் கொரோனா

## நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர்களே பாதிப்பு

(ந.லோகதயாளன்)

**இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட போதிலும் கொரோனா காரணமாக தாயகம் பயணிப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்ட 56 இந்திய மீனவர்களில் 43 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதால் அவர்கள் இந்தியா செல்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.**

**2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 மற்றும் 21ஆம் திகதிகளில் 8 படகுகளுடன் கைதுசெய்யப்பட்ட 56 மீனவர்களும் கடந்த 25 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் நிபந்தனையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டனர்.**

2

## ரயில் மோதி இருவர் சாவு

இருவேறு இருவர் ரயில் மோதுண்டு பரிதாபகரமாக உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைவாக பொலனறுவை, ஹிங்குரக்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹத்தமுன பிரதேசத்தில், மட்டக்களப்பிலிருந்து கொழும்பு - கோட்டை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு ஒருவர்

2

## தரம் 6 மாணவி கொரோனாவால் பரிதாப மரணம்!

பாடசாலை மாணவி ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி மரணமடைந்தார்.

குருநாகல், நாத்தாண்டிய தப்போவ பகுதியைச் சேர்ந்த தரம் 6இல் கல்வி பயின்று வந்த மாணவியே கொரோனா தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

2



### வலைகளை அறுத்து நாசமாக்கிய

## இந்திய மீனவர்களின் அடாவடிக்கு எதிராக வடமராட்சியில் போராட்டம்

(இ.கலையமுதன்)

இந்திய மீனவர்களால் வடமராட்சி மீனவர்களின் வலைகள் அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளன. குறித்த செயலைக் கண்டித்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமராட்சி, பருத்தித்துறை - சுப்பர்மடம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் வலைகளே அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளன.

அதனைக் கண்டித்து மீனவர்கள் சுப்பர்மடம் பகுதியில் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2

## மின்சாரம் தாக்கி வயோதிபர் சாவு!

மின்சாரம் தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநாகல், பன்சியாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொம்பகமுவ பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காட்டு விலங்குகளிடமிருந்து பயிர்ச்செய்கைகளைப் பாதுகாக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டிருந்த சட்டவிரோத மின்வேலியில் சிக்குண்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

2

## கால்வாயிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, இராஜகிரிய ரோயல் பார்க் பிரதேசத்திலுள்ள வாவிக் கரையோர வீதியிலுள்ள கால்வாய் ஒன்றிலிருந்து இன்று காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் கொலை செய்யப்பட்டுள்ளாரா அல்லது அவர் கால்வாயில் வீழ்ந்துள்ளாரா என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## வடமராட்சி கிழக்கில் காணாமல்போன மீனவர்கள் இருவரும் சடலங்களாக மீட்பு





யாழ்., வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியில் கடற்றொழிலுக்குச் சென்று காணாமல்போன இருவரும் இன்று சடலங்களாகக் கரையொதுங்கியுள்ளனர். வத்திராயன் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய

2



## இந்திய மீனவர்களின் அடாவடிக்கு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகளில் படகுகளை, வலைகளை வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் அந்த வீதி ஊடான போக்குவரத்துக்கள் முற்றாகப் பாதிப்படைந்தன.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் –

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றன. மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்துமாறு பல்வேறு தரப்பினரிடமும் தொடர்ச்சியாகப் பல்வேறு தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்தோம். பல கட்டங்களாகப் போராட்டங்களை முன்னெடுத்தோம். இது எதற்குமே பயனில்லை.

மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்கின்றன. அவர்களைக் கட்டுப்படுத்தவோ – அவர்களைத் தடுத்து நிறுத்தவோ எவரும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

அத்துமீறி எமது எல்லைக்குள் நுழையும் மீனவர்கள் மீது தாக்குதல் நடாத்தி அவர்களை விரட்டியடிக்க எம்மால் முடியும். ஆனால், நாட்டின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டும், நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தக் கூடாது என்ற எண்ணத்திலையே நாம் பொறுமை காக்கின்றோம்.

அத்துமீறும் மீனவர்களை, அவர்களின் படகுகளுடன் சிறைப்பிடித்து எமது கரைக்குக் கொண்டு வரவும் எம்மால் முடியும்.

எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதேவேளை, எமது பிரச்சினைகள் தொடர்பில் இந்தியா கரிசனை கொள்ளாவிடின் நாம் சீனாவின் உதவியை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

கடற்றொழில் அமைச்சர் இது தொடர்பில், நடவடிக்கை எடுக்க முடியாவிடின் அவர் அமைச்சுப் பதவியில் இருந்து விலகுவதே சிறந்தது. – என்றனர்.

## மின்சாரம் தாக்கி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொம்பகமுவ, மகுல்பொத்த பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயது நபரே மரணமடைந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காகக் குருநாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டவிரோத மின் வேலியை அமைத்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடமராட்சி கிழக்கில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பிள்ளைகளின் தந்தையான பிறேம்குமார் மற்றும் அவரின் சகோதரியின் மகனான 21 வயதான தணிகை மாறன் ஆகிய இருவரும் கடந்த 27ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் கரை திரும்பவில்லை. இதனைத் தொடர்ந்து அப்பகுதி மீனவர்கள், விளையாட்டுக் கழகத்தினர் ஆகியோர் இணைந்து வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் இரவு – பகலாக பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டனர்.

அவர்களையோ, அவர்கள் பயணித்த படகையோ கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது. ஆனால், அறுந்த வலைகள் மட்டுமே மீட்கப்பட்டிருந்தன.

அவர்களின் படகை இந்திய ரோலர் படகுகள் மோதி விபத்துக்குள்ளாக்கி இருக்கலாம் என மீனவர்கள் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில் இன்று நண்பகல் தணிகைமாறன் என்பவருடைய சடலம் ஆழியவளை கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கியது.

அதைத் தொடர்ந்து பிறேம்குமார் என்பவருடைய சடலம் கேவில் பகுதியில் கரையொதுங்கியது.

இது தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தரம் 6 மாணவி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 28ஆம் திகதி பாடசாலைக்குவஹ் சென்று வீடு திரும்பிய மாணவிக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, குறித்த மாணவி மாரவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில், சிறுமிக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவர் நேற்று மரணமடைந்தார்.

## ரயில் மோதி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரணமடைந்தார்.

ஹிங்குரக்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது நபரே மரணமடைந்தார்.

பொலனறுவை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கம்பஹா ஜாஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடஹக்கபொல பிரதேசத்தில், ஓட்டோ ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில், ஓட்டோவில் பயணித்த இருவரில் ஒருவர் மரணமடைந்தார்.

தெக்கட்டன பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயது நபரே மரணமடைந்தார்.

ஓட்டோவில் பயணித்த மற்றைய நபர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

## யாழ்ப்பாணம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு விடுவிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரையும் விமானம் மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்க சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு விமானச் சிட்டை பெறுவதற்காக மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 43 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டமை மீனவர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் கொரோனா காலத்து 14 நாள்கள் தனிமைப்படுத்தல் காலம் நிறைவு பெற்ற பின்பே அவர்கள் இந்தியாவுக்குப் பயணிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீதி கோரி யாழில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டது.

இன்று முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக ஒன்றுகூடிய ஊடகவியலாளர்கள் கறுப்புக் கொடிகளைத் தாங்கியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன், இது தொடர்பில் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களின் ஒத்துழைப்பையும் பெறும் நோக்கில் துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் ஊடக அமையம், சுதந்திர ஊடக இயக்கம், ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் பங்கேற்புடன் 'கறுப்பு ஜனவரி' போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரியைச் சேர்ந்த தவராசா சுபேசன் என்ற 27வயதான ஊடகவியலாளரே இவ்வாறு முகம் மற்றும் கைகளில் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நகர சபையில் இடம் பெற்ற அமர்வில் கலந்துகொண்ட பின்னர் கச்சாய் வீதி ஊடாகச் சென்ற ஊடகவியலாளரை மோதிக் காயப்படுத்தும் வகையில் வான் ஒன்று ஊடகவியலாளர் பயணித்த மோட்டார் சைக்கிளின் முன்பாக நிறுத்தப்பட்டுள்ளது. பின்னர் வானில் இருந்தவர்களில் ஒருவர் பொல்லுகள் மற்றும் கல் ஆகியவற்றால் ஊடகவியலாளரைத் தாக்கிக் கொலை மிரட்டல் விடுத்து விட்டு வானில் ஏறித் தப்பித்துச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்


தொடர்புகளுக்கு: 0777 43 5557
JITF
SPECIAL DISCOUNT 150,000/-
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலைத் தொழிற்சாலை
கோப்பித் தொழிற்சாலை
சுற்றுலா ஏற்பாடுகள்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அபத்த வாதம் இது!

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்ட விவகாரத்தை ஒட்டி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று கிட்டுப் பூங்காவில் விடுத்த பிரகடனத்தில் ஒரு விடயம் சுட்டப்பட்டுள்ளது.

இந்த அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்த இப்போது வலியுறுத்துகின்றார்கள். அந்தத் திருத்தச் சட்ட சரத்துக்கள் இனி வரப்போகும் புதிய உத்தேச அரசமைப்பிலும் உள்வாங்கப்பட்டால், அந்த ஒற்றையாட்சி அரசமைப்புக்கும் ஆதரவு வழங்கி அதனூடாக தமிழ் மக்கள் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்றும், இனப் பிரச்சினை இதனூடாகத் தீர்க்கப்பட்டு விட்டது என்றும் பறைசாற்றும் நிலைமை வந்துவிடும். அதற்குத்தான் 13 ஐ நடைமுறைப் படுத்தக் கோருவோர் வழி செய்கின்றார்கள் – என்ற சாரப்பட்ட கருத்து அந்தக் கிட்டுப்பூங்கா பிரகடனத்தில் இருந்தது.

இந்தக் கருத்தியல் அல்லது வாதம் அபத்தமானது. அர்த்த மற்றது. ஒரு வகையில் விதண்டாவாதமானது.

இப்போதைய அரசமைப்பையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு முந்திய அரசமைப்பையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டுமே சிங்களவர் தேசத்தினால் இந்தத் தீவின் பெரும்பான்மை எண்ணிக்கையினர் என்ற அட்சர கணித கணக்கின் அடிப்படையில் தமிழர் தேசம் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டவை.

நாங்கள் ஏற்றுக்கொள்ளாத – நாங்கள் அங்கீகரிக்காத – நமது தலைமீது பலவந்தமாகத் திணிக்கப்பட்ட – ஓர் அரசமைப் பில் உள்ள சில ஏற்பாடுகளையாவது நடைமுறைப்படுத்துங்கள் என்று நாம் கோருவது, அந்த அரசமைப்பை நாங்கள் ஏற்று அங்கீகரிப்பதாக அர்த்தமாகாது. அதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே, தப்பித் தவறி 13 ஆவது திருத்தத்தில் உள்ள விடயங்களை அரசு நடைமுறைப்படுத்தி, இனி வரப்போகும் புதிய அரசமைப்பிலும் அதை உள்வாங்கினால், அந்தப் புதிய அரசமைப்பைத் தமிழர்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டார்கள் என்று அர்த்தப்படுத்தவே முடியாது. அப்படி அர்த்தப்படுத்துவார்கள் – அப்படி பறைசாற்றுவார்கள் – என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலிந்து எச்சரிக்கை வியாக்கியானம் கொடுப்பது அபத்த வாதமாகும்.

இந்த அரசமைப்பை இரண்டு கஜேந்திரர்களும் உள்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஏற்கவில்லை என்பது எவ்வளவு உண்மையோ –

அதுபோல, அவர்கள் இருவரும் இந்த அரசமைப்புக்கு விசுவாசமும் மதிப்பும் தெரிவித்து, அந்த அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைவாக, அது வலியுறுத்தும் ஒற்றையாட்சி முறைமைக்கு உட்பட்டு, அதை முழு அளவில் ஏற்றுக்கொண்டு, எம்.பிக்களாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னரும், அந்த அரசமைப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேயில்லை என்பதை சக தமிழ் மக்களாகிய நாங்கள் யாவரும் நம்புவதும் உண்மையே.

இந்த அரசமைப்புக்கு விசுவாசமாகவும், பிரிவினைக்கு எதிராகவும் சத்தியப்பிரமாணம் செய்து, கஜேந்திரகுமாரும் கஜேந்திரனும் எம்.பிக்களாகப் பதவி ஏற்றபின்னரும், இந்த அரசமைப்புக்கு அவர்கள் விசுவாசமானவர்கள் அல்லர், அதை ஏற்காதவர்கள் என்று நாங்கள் முழு அளவில் நம்பும் போது –

இப்போதைய அரசமைப்பில் இருக்கும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துங்கள் என்று கோருகின்றமைக்காக அந்த அரசமைப்பையோ அல்லது அந்தக் கோரிகை விடயம் இனிப் புதிதாக வரக் கூடிய அரசமைப்பிலும் உள்வாங்கப்படும் காரணத்திற்காக அந்தப் புதிய அரசமைப்பையோ மேற்படி விடயத்தை வலியுறுத்தியவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்று ஏன் நாம் நம்ப வேண்டும்?

ஆகவே இந்த வாதம் – 13 ஐ நடைமுறைப்படுத்துங்கள் என்ற கோரிக்கை – அது நடைமுறைப்படுத்தப்பட்டால், அரசமைப்பை ஏற்று அங்கீகரித்ததாக அர்த்தம் பண்ணப்படலாம் என்ற கருத்தியல் அபத்தமானது என்பது தெளிவு.

# முட்டை வீசித் தாக்கியதின் பின்னணியில் பலம் வாய்ந்த அமைச்சர் மற்றும் வர்த்தகர்?

## மடக்கப்பட்ட இருவர் பொலிஸ் விசாரணையில்



கம்பஹாவில் நேற்று நடை பெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட மா நாட்டின் போது அதன் தலைவர் அநுர குமார திஸநாயக்கா மீது முட்டைகளை வீசித் தாக்குதல் நடத்திய இருவர், அங்கிருந்தவர்களால் மடக்கப்பட்டு நித்தம்புவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

முட்டை தாக்குதலின் பின்னணி பற்றிய அனைத்து விவரங்களையும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலம் வாய்ந்த அமைச்சர் மற்றும் பிரதேசத்தில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் பெயர்களை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தங்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கியதை இருவரும் ஒப்புக் கொண்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது. சந்தேகநபர்கள் தம்மிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர் எனவும், முட்டைத் தாக்குதலை நடத்துவதற்கான சதித்திட்டம் தொடர்பில் தாங்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் நித்தம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆற்றில் தவறி வீழ்ந்த இளைஞனை மீட்க முயன்ற போதே மற்றைய நான்கு யுவதிகளும் சுழியில் சிக்கிப் பலியாகினர்

## உமாஓயா ஆற்றில் நடந்த சோகச் சம்பவம் குறித்துத் தகவல்

அட்டாம்பிட்டிய தோட்ட முதலாம் பிரிவிலிருந்து, கெரண்டியல்ல பகுதியில் ஓடும் உமா ஓயா ஆற்றில் நீராடச் சென்ற சமயம் திடீரென ஏற்பட்ட சுழியில் சிக்குண்டு ஆற்றில் மூழ்கி உயிரிழந்த ஐவரின் விவரங்களும் வெளியாகியுள்ளன.

நபர் ஒருவரின் ஓராண்டு நினைவஞ்சலி தின நிகழ்வில், கடந்த 28ஆம் திகதி கலந்து கொண்ட பின் உறவினர்களில் 11 பேர் சம்பவ தினம் வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் உள்ள கெரண்டியல்ல, உமாஓயா ஆற்றில் நீராடச் சென்றுள்ளனர். இவர்கள் அனைவரும் 20 தொடக்கம் 25 வரைக்குட்பட்ட இளைஞர், யுவதிகளாவர்.

ஆற்றில் நீராடிவிட்டு 6 பேர் அக்கரைக்குச் சென்ற வேளையில், இளைஞர் ஒருவரும் , 4 யுவதிகளும் ஆற்றிலிருந்த கற்பாறையொன்றில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கையில், இளைஞர் தவறி ஆற்றில் வீழ்ந்துள்ளார். அவரைக் காப்பாற்றுவதற்காக யுவதிகள் ஒவ்வொருவரும் கைகளைப் பற்றிக் கொண்டு வரிசையாக ஆற்றில் இறங்கிய வேளையில், திடீரென ஏற்பட்ட சுழியில் சிக்குண்டு ஆற்றில் மூழ்கிக் காணாமல் போயினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக அட்டாம்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து, தோட்ட இளைஞர்களுடன் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்ட போது, நால்வர் சடலங்களாக உடன் மீட்கப்பட்டனர்.

இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் நெலுவ, கின்ரூஸ் தோட்டத்தைச் சேர்ந்த ஜெயராம் காஞ்சனப்பரியா (வயது21), செல்வகுமார் பரிமளாதேவி (வயது19), அட்டன், திம்புலப்பத்தனையைச் சேர்ந்த அடையப்பன் பவானி சந்திரா (வயது24), அட்டாம்பிட்டிய, முதலாம் பிரிவைச் சேர்ந்த வனராஜா டேவிட் குமார் (வயது 23) ஆகியோர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஆற்றில் மூழ்கி காணாமல் போயுள்ள நெலுவ, கின்ரூஸ் தோட்டத்தைச் சேர்ந்த செல்வகுமார் சசிப்பிரியா (வயது20) என்ற யுவதியின் சடலம் பின்னர் மீட்கப்பட்டது.

இதேவேளை உயிரிழந்த எஸ்.சசிப்பிரியா, எஸ்.பரிமளாதேவி (திரிர) ஆகியோர் சகோதரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# டெவோன் நீர்வீழ்ச்சி காட்டுப் பகுதிக்குத் தீ! ஐம்பது ஏக்கர் மலைப்பகுதி எரிந்து நாசம்!!



டெவோன் நீர்வீழ்ச்சிக்கு அண்மித்த காட்டுப்பகுதிக்கு இனம்தெரியாத விசமி களால் தீ வைக்கப்பட்டதன் காரணமாக நீர் வீழ்ச்சியை அண்மித்த மற்றும் சுற்றியுள்ள பகுதியில் சுமார் 50 ஏக்கர் வரை தீயினால் எரிந்து நாசமாகியுள்ளது.

மலையக பகுதியில் வறட்சியான கால– நிலையுடன் கடும் காற்றும் வீசி வருகிறது. பற்றைக்காடுகள் ஏற்கனவே காய்ந்து போயுள்ளமையால் தீ மிக வேகமாக பரவி வருகிறது. இதனால் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது கடினமாகவுள்ளது.

வறட்சியான காலநிலையை அடுத்து மலையக நீரேந்து பிரதேசங்களுக்கு சமீபமாக நீரேந்தும் பிரதேசங்களிலுள்ள காட்டுப் பகுதிகளுக்கு இனந்தெரியாத விசமிகளால் தொடர்ச்சியாகத் தீ வைக்கப்பட்டு வருவதனால் எதிர்காலத்தில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களுக்குத் தீ வைக்கப்படுவதன் காரணமாக அப்பகுதியில் உள்ள நீர் ஊற்றுக்கள் அற்றுப் போவதுடன் சிறிய வகை உயிரினங்கள், இந்தப் பிரதேசத்திற்கே உரித்தான அரிய வகை தாவரங் கள், பெறுமதி மிக்க மரக்கன்றுகள் ஆகியன அழிவடையும் நிலையில் எதிர்நோக்கியுள்ளன. வறட்சியான கால– நிலையை அடுத்து பல பிரதேசங்களில் தற்போது தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்நிலையில் தொடர்ச்சியாக வனப்பகுதிகளுக்குத் தீ வைக்கப்படுவதனால் இந்நிலை மேலும் அதிகரித்து நீரின்றி பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடலாம் என பிரதேசவாசிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேநேரம் நீரேந்து பிரதேசங்களில் உள்ள காட்டுப் பகுதிகளுக்குத் தீ வைக்கப்படுவதனால் தேசிய மின் உற்பத்திக்கும் பாதிப்பு ஏற்படலாம். எனவே காடுகளுக்குத் தீ வைப்பவர்களை உடன் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். மிருகங்களை வேட்டையாடுவதற்கும் பொழுது போக்குக்காகவும் இந்தக் காட்டுப் பகுதிகளுக்கு செல்லும் சில விசமிகளால் தீ வைக்கப்படுகின்றன எனப் பாதுகாப்புதரப்பினர் தெரிவிக்கின்றனர். எனவே, வனப்பகுதிகளை விசமிகளிடமிருந்து பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

# தடுப்பூசி போடாமல் இருப்பது தற்கொலைக்கு சமம்




தடுப்பூசி குறித்த வதந்திகள் மற்றும் பொய்யான செய்திகள் அதிகமாக உலாவி வரும் நிலையில் கொரோனா மற்றும் தடுப்பூசிகள் குறித்து பொய் செய்திகளை நம்பவேண்டாம் என பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் கூறியுள்ளார்.

கொரோனா மூன்றாவது அலை தீவிரமடைந்துள்ள நிலையில் உலகம் முழுவதும் ஒரே நாளில் 32,76,816 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 37,00,43,261 பேராக உயர்ந்துள்ளது. ஒரே நாளில் 9,733 பேர் மரணமடைந்துள்ளனர்.

கொரோனா பாதிப்பில் இருந்து ஒரே நாளில் 22, 08,287 பேர் மீண்டுள்ள நிலையில், இதன் மூலம் உலகம் முழுவதும் 29,22,73,543 பேர் குணமடைந்துள்ள நிலையில் இதுவரை உலகம் முழுவதும் மொத்தம் 56,66,789 பேர் கொரோனாவால் மரணமடைந்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதையடுத்து உலகம் முழுவதும் ஒரு நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் தடுப்பு ஊசிகள் பொதுமக்களுக்கு செலுத்தப்பட்டு வருகிறது. பைஸர், அஸ்ட்ரேஜனக்கா, ஸ்புட்னிக், கோவாக்சின், கோவிஷீல்டு உள்ளிட்ட தடுப்பூசிகள் பொதுமக்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றன. அரசு சார்பிலும் தனியார் நிறுவனங்களின் சார்பிலும் தயாரிக்கப்படும் தடுப்பூசிகள் பொது மக்களுக்கு இந்தியாவில் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும் தனியார் மருத்துவமனைகளிலும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகிறன.

இந்தியாவில் மட்டும் இதுவரை 165 கோடி பேருக்கு மேலே தடுப்பு ஊசி செலுத்தப்பட்டு உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. உலகம் முழுவதும் இதுவரை சுமார் 400 கோடி மக்கள் தடுப்பூசி பெற்றிருக்கலாம் என தரவுகள் தெரிவிக்கின்றன. தடுப்பூசி ஒன்றுதான் தொற்று நோயில் இருந்து தப்பிக்கும் ஆயுதம் என தொடர்ந்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் செய்திகள் பரப்பப்பட்டு வரும் நிலையில் , தடுப்பூசி குறித்த வதந்திகள் மற்றும் பொய்யான செய்திகள் அதிகமாக உலாவி வருகின்றன. இந்த நிலையில் கொரோனா மற்றும் தடுப்பூசிகள் குறித்து பொய் செய்திகளை நம்பவேண்டாம் என போப் பிரான்சிஸ் கூறியுள்ளார்.

கத்தோலிக்க ஆன்மீகத் தலைவர் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் தடுப்பூசியை அன்பின் செயல் எனவும் தடுப்பூசி போட்டுக் கொள்ளாமல் இருப்பது தற்கொலைக்கு சமம் எனவும் தொடர்ந்து தடுப்பூசிக்கு ஆதரவாக பேசி வருகிறார் தற்போது தடுப்பூசி போடுவது மக்களின் தார்மீகக் கடமை என அவர் கூறியுள்ளார். ஐரோப்பாவின் ரோம் நகரில் செய்தியாளர்களை சந்தித்த அவர் கொரோனா குறித்தும் அதற்கான தடுப்பூசி குறித்தும் பொய்யான தகவல்கள் பரப்பப்படுகின்றன எனவும் அவற்றை நம்பாமல் அறிவியல் தரவுகளின் அடிப்படையில் துல்லியமான தகவல்களை அறிவது மனித உரிமை எனவும் கூறியுள்ளார். குறிப்பாக சமூக வலைதளங்களை காணப்படும் தகவல்களில் உண்மை எது, பொய் எது என்பதை ஆராய்ந்து பார்க்கும் திறன் இல்லாதோருக்கு துல்லிய விவரங்கள் சென்றடைய வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

தடுப்பூசி மற்றும் கொரோனா குறித்த பொய் செய்திகள் மறுக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ள போப் பிரான்சிஸ், அதேசமயம் போதிய விழிப்புணர்வு அல்லது பொறுப்பின்றி கிடைக்கும் தகவல்களை நம்பும் தனிநபரின் மரியாதையும் காக்கப்பட வேண்டும் எனவும், பொய்த் தகவல் என்ற வலையில் விழுந்துவிட்ட அவர்களிடம் கருணையுடன் பேசி உண்மையை எடுத்துக் கூற வேண்டிய பொறுப்பு கத்தோலிக்க திருச்சபைக்கு உள்ளது எனவும் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் கூறியுள்ளார்.

# உணவுக்காக பிச்சை எடுக்கும் டீக்ரே மருத்துவர்கள்



எத்தியோப்பியாவில் போரினால் பாதிக்கப்பட்ட டீக்ரே பகுதியிலுள்ள மிகப்பெரிய மருத்துவமனையின் சில செவிலியர்கள் மற்றும் மருத்துவர்கள் உணவுக்காக பிச்சை எடுக்க வேண்டியுள்ளதாக மருத்துவர் ஒருவர் தெரிவித்தார்.

எட்டு மாதங்களாக தங்களுக்கு சம்பளம் வழங்கப்படாததால், தங்களுடைய குடும்பத்தைக் காப்பாற்ற வேறு வழிகளைத் தேட வேண்டிய் கட்டாயத்தில் தாங்கள் இருப்பதாகக் கூறினார்.

டீக்ரேயில் இன்னும் அதிகமான மக்களை கடுமையான பட்டினி பாதிக்கிறது என்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கைகள் கூறும் நிலையில் மருத்துவர் இதைத் தெரிவித்துள்ளார்.

22 லட்சம் மக்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்படுகின்றனர், என்று அந்த அறிக்கை கூறுகிறது.

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களில் பாதிப் பேர் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று ஐ.நா. உலக உணவு திட்டத்தின் கணக்கெடுப்பு கண்டறிந்துள்ளது.

மொத்தத்தில், டீக்ரே, அமாரா, அஃபார் ஆகிய பகுதிகளில், பல மாதங்களாக நடக்கும் போரினால் 90 லட்சம் மக்களுக்கு ஏதேனும் ஒரு வகையான உணவு உதவிக்கான தேவை உள்ளதாக ஐ.நா உலக உணவுக் கூட்டமைப்பு கூறுகிறது.

நவம்பர் 2020 ஆம் ஆண்டு முதல் எத்தியோப்பிய மத்திய அரசுப் படைகள் வடக்கு டீக்ரே பிராந்தியத்தில் இருந்து கிளர்ச்சியாளர்களுடன் போரிட்டு வருகின்றன. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அந்த நேரத்தில் டீக்ரேயின் பெரும்பகுதி துண்டிக்கப்பட்டுள்ளது. முக்கிய உதவி, மருத்துவப் பொருள்களை வழங்குவது போன்றவை கடினமாகின. வங்கிகளும் மூடப்பட்டுள்ளன. அதாவது மக்கள் மற்றவர்களுக்குப் பணம் செலுத்த அவர்களுடைய நிதியை எடுத்துக்கொள்ள முடியாத சூழல் ஏற்பட்டது.

இந்தத் துன்பங்களில் இருந்து மருத்துவர்களும் செவிலியர்களும் கூடத் தப்பவில்லை.

டீக்ரேயின் தலைநகரான மெக்கெல்லில் உள்ள அய்டர் மருத்துவமனையைச் சேர்ந்த ஒரு மருத்துவர், பெயர் குறிப்பிடக் கூடாது என்ற கோரிக்கையோடு பி.பி.சியிடம் பேசிய போது, உணவுப் பொட்டலங்களுக்காக செவிலியர்களும் மருத்துவர்களும் வரிசையில் நிற்பதைப் பார்ப்பது கடந்த ஏழு மாதங்களாகச் சாதாரணமாகிவிட்டது என்கிறார்.

இவர்களுக்குக் கடந்த ஆண்டு மே மாதம் முதல் ஊதியம் வழங்கப்படவில்லை.

பெரும்பாலானோர் ஒரு நாளைக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய உணவின் அளவைக் குறைத்துவிட்டனர். சமையல் எண்ணெய், காய்கறிகள், தானியங்கள் போன்றவற்றை வாங்குவதற்கே நினைக்க முடியாத அளவுக்கு விலை உயர்ந்துள்ளது. சிலர் உணவுக்காக பிச்சை எடுக்கத் தொடங்கியுள்ளனர், என்று மருத்துவர் கூறினார்.

மருத்துவப் பொருள்கள் பற்றாக் குறை சிகிச்சையை எவ்வாறு பாதித்தது என்பது குறித்தும் அவர் பேசினார். அறுவை சிகிச்சையின் போதும் அதற்குப் பின்னரும் காயங்களைச் சுத்தம் செய்வதற்கு அவசியமான கிருமி நீக்கம் செய்யப்பட்ட அறுவை சிகிச்சை துணிகளுக்குப் பதிலாக, அய்டர் மருத்துவ மனை நன்கொடையாகக் கிடைத்த ஆடைகளைச் சார்ந்துள்ளது. அவை வெட்டப்பட்டு, சுத்தம் செய்து பின்னர் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த மாதத் தொடக்கத்தில் சுஃபீல் மேரிக் என்ற 3 மாத குழந்தையைப் பற்றி பி.பி.சி. எழுதியது. அந்தக் குழந்தை இறந்துவிட்டதாகவும் மருத்துவர் கூறினார். உடல் எடை அதிகரித்ததால் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பப்பட்ட குழந்தை, வீட்டில் போதுமான உணவு இல்லாததால், ஜனவரி முதல் அன்று உயிரிழந்தது.

போரின் தொடக்கத்திலிருந்து டீக்ரேயின் பெரும்பகுதி தகவல் தொடர்பு முடக்கத்தில் இருப்பதால் பி.பி.சியால் இந்த விவரங்களைச் சுயாதீனமாகச் சரிபார்க்க முடியவில்லை.

இந்த வாரம் சில சிறிய நிவாரணங்கள் இருக்கலாம். சர்வதேச செஞ்சிலுவை சங்கம் கடந்த செப்ரெம்பருக்குப் பிறகு முதன்முறையாக மருத்துவ உதவிகளை மெகெல்லேவுக்கு அனுப்ப முடிந்தது.

டிசம்பர் மத்தியில் இருந்து உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லும் ஐ.நாவின் வாகனங்கள் எதுவும் டீக்ரேவை சென்றடையவில்லை. ஆனால், பட்டினி மரணங்களைத் தடுக்க ஒரு நாளைக்கு 100 லாரிகள் தேவை என்று உலக உணவுத் திட்டம் கூறுகிறது.

அடுத்த 6 மாதங்களுக்கு வடக்கு எத்தியோப்பியாவில் அதன் செயல்பாடுகளுக்கு 337 மில்லியன் டாலர் நிதியளிக்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பு கேட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் டீக்ரே மோதல் வெடித்தது. பிரதமர் அபிய் அகமது அந்தப் பகுதியிலுள்ள பிராந்தியப் படைகளுக்கு எதிராக ராணுவத் தாக்குதலை நடத்த உத்தரவிட்டார். மேலும், அங்குள்ள அரசுப் படையினர் தங்கியிருந்த ராணுவத் தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பதிலடியாக அவ்வாறு செய்ததாகக் கூறினார்.

அபியின் அரசுக்கும் டீக்ரேவில் ஆளும் கட்சியான டீக்ரே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களுக்கும் இடையே பல மாதங்களாக நடந்த சண்டைக்குப் பிறகு இந்த நிலை ஏற்பட்டது.

கடந்த சில மாதங்களில், கூட்டாட்சி ராணுவம் கிளர்ச்சியாளர்களின் முன்னேற்றத்தை முறியடித்துள்ளது. ஆனால், டீக்ரே மற்றும் அஃபார் பகுதிகளுக்கு இடையேயான எல்லைக்கு அருகில் சண்டை தொடர்கிறது.


அமைதிப் பேச்சு வார்த்தை விரைவில் நடக்கலாம் எனக் கொஞ்சம் நம்பிக்கை உள்ளது.

'ஹாரன் ஆஃப் ஆப்ரிக்கா' என்று அழைக்கப்படும் பகுதியில் அமைந்துள்ள நாடுகளுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அமெரிக்க சிறப்புத் தூதுவர் டேவ்விட் சாட்டர்ஃபீல்ட், சமீபத்தில் அடிஸ் அபாபாவுக்குச் சென்றார்.

அதேநேரத்தில் ஆப்ரிக்க யூனியனின் மத்தியஸ்தரான முன்னால் நைஜீரிய அதிபர் ஒலுசெகுன் ஒபாசன்ஜோ டீக்ரேயின் மூத்த தலைவர்களையும் சந்தித்தார்.

# கோரிக்கைகளை அமெரிக்கா உதாசீனப்படுத்தி விட்டது

## பிரான்ஸிடம் ரஷ்யா தெரிவிப்பு!



உக்ரைன் விடயம் தொடர்பாக ரஷ்யா விடுத்த கோரிக்கை மற்றும் கவலைகளை அமெரிக்காவும் நேட்டோவும் கவனிக்கவில்லை என்ற ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரோனிடம் தெரிவித்துள்ளார்.


உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தக்கூடும் எனத் தகவல் வெளிவரும் இந்தச் சூழலில் இருநாட்டு தலைவர்களும் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சு நடத்தினர்.

இந்த பேச்சின் போது, உக்ரைன் நெருக்கடி இன்னும் தீர்க்கப்படவில்லை என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரத்தில் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்கும் முன்பாக அமெரிக்காவின் திட்டத்தை மிக நெருக்கமாக கவனிப்பதாகவும் புடின் கூறியுள்ளார்.

இதனிடையே அடுத்த மாதம் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுப்பதற்கான தெளிவான வாய்ப்புகள் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளார்.

# அயர்லாந்து கரைப் பகுதியில் இருந்து இராணுவ ஒத்திகையை நகர்த்தியது ரஷ்யா!



அரசியல்வாதிகள் மற்றும் மீனவர்களின் அழுத்தத்திற்குப் பின்னர், ரஷ்யாவின் இராணுவப் பயிற்சி அயர்லாந்து கடற்கரையிலிருந்து மேலும் நகர்த்தப்பட்டது.

நடைபெற இருந்த லைவ் ஃபயர் பயிற்சி தமது பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்கு வெளியே மாற்றப்படும் என அயர்லாந்தின் வெளிவிவகார அமைச்சர் சைமன் கோவேனி கூறியிருந்தார்.

மேலும் தமது பொருளாதர மண்டலத்திற்குள் மேற்கொள்ளப்படும் பயிற்சிகளை அயர்லாந்து வரவேற்காது என்றாலும் ரஷ்யாவைத் தடுக்க அந்நாட்டுக்கு அதிகாரம் இல்லை என கோவேனி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்த பயிற்சியை இடமாற்றம் செய்வதற்கான முடிவு நன்மையின் சைகையாக எடுக்கப்பட்டதாக அயர்லாந்திற்கான ரஷ்ய தூதர் யூரி ஃபிலடோவ் சனிக்கிழமை தெரிவித்தார்.

அத்தோடு பாரம்பரிய மீன்பிடி பகுதிகளில் ஐரிஷ் கப்பல்களால் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

# தடுப்பூசியை போடுவதில் மக்களுக்கு ஆரம்பத்தில் இருந்த ஆர்வம் இல்லை

## மட்டு. மாவட்ட செயலர் கருணாகரன் தெரிவிப்பு




மட்டக்களப்பு, ஜன. 31

மட்டக்களப்பு மாவட்டத்தில் தடுப்பூசியை போடுவதில் மக்களுக்கு ஆரம்பத்தில் இருந்த ஆர்வம் தற்போது இல்லை என மாவட்ட செயலர் கருணாகரன் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசியை ஆரம்பத்திலே போடுவதில் மக்களுக்கு இருந்த ஆர்வம் தற்போது இல்லை. இது தொடர்பில் பிரதேச செயலாளர்களுக்கு தடுப்பூசியின் முக்கியத்துவத்தை அறிவித்து இதனை அவர்களின் வலையமைப்பு மூலமாக செயற்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

சமூகத்தை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதை நாம் கொரோனா வைரஸ் மூலமாக அறிந்துகொண்டோம். சுகாதார ஊழியர்களின் தைரியமும் அர்ப்பணிப்பும் எப்போதும் இருக்க வேண்டும். அவர்களுக்காக நாம் எப்போதும் பக்கபலமாக இருப்போம்.

– இவ்வாறு என மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் இன்று மட்டக்களப்பில் இடம் பெற்ற நிகழ்வின்போது தடுப்பூசியின் முக்கியத்துவத்துவம் பற்றி கருத்து தெரிவித்தார்.

## ஐஸ் போதைப் பொருள்களுடன் கைதானோருக்கு விளக்கமறியலில்

மட்டக்களப்பு நகர் பகுதியில் ஐஸ் போதைப் பொருள்களுடன் இருவரை கைது செய்தபோது அதில் இளைஞர் ஒருவர் போதைப் பொருளை வாயில் போட்டு விழுங்கினார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்த இளைஞன் உட்பட இருவரையும் எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்ற பதில் நீதிவான் இந்திரன் வினோவா நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

பொலிஸ் மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம் சம்பவ தினமான வெள்ளிக்கிழமை பொலிஸார் இரவு நகர் பகுதியிலுள்ள பன்சாலை வீதியில் இளைஞர் ஒருவரையும் பயினியர் வீதியில் மற்றொரு இளைஞரையும் 450 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்தனர்.

இதன்போது பன்சாலை வீதியில் வைத்து கைது செய்யப்பட்ட இளைஞன் தனது வாயில் செப்பிங் பையில் கட்டிவைத் திருந்த ஐஸ் போதைப் பொருளை கடித்து விழுங்கியுள்ளான். இதனையடுத்து அந்த இளைஞனை மட்டு. போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட 21, 23 வயதுடைய இளைஞர்களுக்கு எதிராக நீதிமன்றில் பொலிஸார் வழக்கு தாக்குதல் செய்ததையடுத்து குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்தபோது பதில் நீதிவான் இந்திரன் வினோவா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞனை பார்வையிட்ட பின்னர் இருவரையும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## மூவினமாணவர்களும் பங்கேற்ற தைப்பொங்கல்




நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய வருடாந்த தைப்பொங்கல் தினவிழா இம்முறை மூவின மாணவர்கள், மூன்றுமத ஆசிரியர்களின் பங்கேற்றலுடன் அதிபர் சீ.பாலசிங்கனின் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சம்மாந்துறை வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவ ராஜா கலந்து சிறப்பித்தார்.

விழாவில் பங்கேற்ற இஸ்லாமிய கிறிஸ்தவ ஆசிரியர்கள் மற்றும் மூவினமாணவர்களும் பாரம்பரிய பொங்கல் உணவை விரும்பி பரிமாறிக்கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.




| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| பிறந்த திகதி - 06.03.1984 மதம் - இந்து ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி கி.பா - செவ் - தகைமை - A/L தொழில் - சுயதொழில் எதிர்பார்ப்பு - உள்ளூர் மணமகள் | பிறந்த திகதி - 16.04.1983 மதம் - இந்து ஜாதி - V பெண் நட்சத்திரம் - கார்த்திகை 3 கி.பா - செவ் - 2 இல் சூரி செவ் தகைமை - BA தொழில் - அபிவிருத்தி உத்தியோகத்தர். எதிர்பார்ப்பு - சுய / அரச தொழில் மணமகன் |
| பிறந்த திகதி - 08.12.1979 மதம் - இந்து ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூசம் கி.பா - செவ் - 8 இல் தகைமை - Bcom தொழில் - அதிபர் எதிர்பார்ப்பு - அரசதொழில் மணமகள் | பிறந்த திகதி - 31.01.1995 மதம் - இந்து ஜாதி - P பெண் நட்சத்திரம் - திருவோணம் கி.பா - செவ் - தகைமை - A/L தொழில் - எதிர்பார்ப்பு - உள்ளூர் மணமகன் |
| பிறந்த திகதி - 13.02.1982 மதம் - இந்து ஜாதி - V ஆண் நட்சத்திரம் - சித்திரை 3ம் பாதம் கி.பா - செவ் - 4இல் தகைமை -A/L தொழில் - UK PR எதிர்பார்ப்பு - உள்ளூர் மணமகள் | பிறந்த திகதி - 04.08.1992 மதம் - இந்து ஜாதி - V பெண் நட்சத்திரம் - சித்திரை 2ம் கி.பா - செவ் - தகைமை - BA Studying தொழில் - எதிர்பார்ப்பு - அரச தொழில் மணமகன் |
| பிறந்த திகதி - 14.10.1983 மதம் - இந்து ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தராடம் கி.பா - செவ் - தகைமை -Media Communication in Canada தொழில் - Stock Controller Canada எதிர்பார்ப்பு - உள்ளூர் மணமகள் | பிறந்த திகதி - 18.12.1989 மதம் - இந்து ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம் கி.பா - செவ் - தகைமை - Diploma in Teaching Science Studying B.Ed Special தொழில் - Science Teacher எதிர்பார்ப்பு - அரச தொழில் |

077 650 5097, 077 887 6969
தலைமை அலுவலகம் - கனடா - 0014166661855



## கன்னியா வெந்நீர் ஊற்று சிவன் ஆலயம் பூட்டப்பட்டது

திருகோணமலை – கன்னியா வெந்நீர் ஊற்று சிவன் ஆலயத்திற்குள் எவரும் செல்ல முடியாத நிலையில் பூட்டு போடப்பட்டுள்ளது. இந்த நிலையில் பொது மக்களின் மத வழிபாட்டுக்கு தடை விதிப்பதையிட்டு மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

திருகோணமலை கன்னியா சிவன் கோயில் தொடர்பில் ஏற்கனவே திருகோணமலை மேல் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருகின்ற நிலையில், மக்களின் வழிபாட்டிற்கு எவ்வித தடையும் நீதிமன்றம் விதிக்கவில்லை எனவும் தெரியவருகின்றது.

இதன்போது பொலிஸ் நிலையத்திற்கும், கோயில் மூடப்பட்டமைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் தொல்பொருள் அமைச்சினால் மூடுமாறு கூறப்பட்டதை அடுத்து தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள் மூடி தங்களுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி கூறியுள்ளார்.

குறித்த சிவன் கோயில் மூடப்பட்டமை தொடர்பில் எதுவித ஆவணங்களும் பொலிஸாருக்கு கிடைக்கவில்லை எனவும் நாளையதினம் தொல்பொருள் திணைக்களத்தினரிடம் சிவன் கோயில் மூடப்பட்டமை தொடர்பிலான ஆவணங்களைப் பெற்றுத் தருவதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி இதன்போது தெரிவித்ததாகத் திருகோணமலை தமிழர் சமூகத்தின் இணைப்பாளர் ஆர்.நிக்லஸ் தெரிவித்துள்ளார்.

## நுரைச்சோலை இந்த நிலையத்தின் மின்பிறப்பாக்கி சீர் செய்யப்பட்டது

நுரைச்சோலை லக் விஜய அனல் மின் உற்பத்தி நிலையத்தின் செயலிழந்த மின்பிறப்பாக்கி சீர் செய்யப்பட்டுள்ளதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் அன்ட்ரூ நவமணி தெரிவித்துள்ளார்.

900 மெகாவோட் மின் உற்பத்தி செய்யும் குறித்த மின் உற்பத்தி நிலையத்தின் 300 மெகாவோட் மின்சாரத்தை வழங்கும் மின் பிறப்பாக்கி கடந்த டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி செயலிழந்தது.

இந்த நிலையில், குறித்த மின் பிறப்பாக்கி சீர்செய்யப்பட்டு தற்போது 160 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையில் தேவையான மின்சாரம் தொடர்பில் மதிப்பிடப்பட்டு வருவதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இந்த தேவையினை தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்களினூடாக அல்லது தனியார் மின் உற்பத்தி நிலையங்களின் மூலம் பூர்த்தி செய்வது குறித்து இதன்போது தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார் .

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் தீர்வாக 13 ஐ என்றும் ஏற்றுக் கொள்ளவில்லை என்கிறார் சம்பந்தன்

## மக்கள் முன்னணியினர் இட்டுக்கட்டிய கதைகளைக் கூறி பொய்யான பிரசாரமாம்



அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான அரசியல் தீர்வாக எந்தவொரு தருணத்திலும் ஏற்றுக்கொண்டு கோரிக்கை விடுக்க வில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இட்டுக்கட்டப்பட்ட கதைகளைக் கூறிப் பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

13ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கான தீர்வாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் கூறியது கிடையாது.

தமிழர் விடுதலைக் கூட்டணியாக இருந்தாலும் சரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலும் சரி, தமிழரசுக் கட்சியாக இருந்தாலும் சரி, இந்த நிலைப்பாட்டில் மாற்றங்கள் காணப்பட்டிருக்கவில்லை.

இந்தப் பின்னணியில் தற்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய ஆவணத்திலும் அவ்விடயங்கள் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இது சம்பந்தமான ஆவணத்தில் கையொப்பமிட்ட தலைவர்களும் மிகத் தெளிவாக அந்த விடயத்தைக் கூறியுள்ளனர்.

இருப்பினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இந்த ஆவணத்தைத் திரிவுபடுத்தி, இட்டுக்கட்டப்பட்ட விடயங்களை வெளிப்படுத்தி, பொய்யான பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றார் கள்.

எம்மைப்பொறுத்தவரையில், பிரிக்க முடியாத, பிளவுபடுத்த முடியாத ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வரும் இணைந்த வடக்கு, கிழக்கில், தங்களைத் தாங்களே ஆட்சி செய்யக் கூடிய வகையிலும், தங்களின் தலைவிதியை தீர்மானிக்க கூடிய வகையிலும், மீளப்பெறமுடியாத அதிகாரப் பகிர்வு செய்யப்பட்டு, சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டித் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். அதுவே தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்கும்.

ஆனால், 13ஆவது திருத்தச்சட்டமானது, தற்போதைய அரசமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். அத் திருத்தச்சட்டமானது அதிகாரப்பகிர்வின் ஒரு வடிவமாக அரசமைப்பில் காணப்படுகின்றது. ஆகவே அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் மாறிமாறி இருந்த தலைவர்கள் அனைவரும் 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்றே வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்கள்.

பிரேமதாஸ காலத்தில் மங்கள முனசிங்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

சந்திரிகாவின் காலத்தில் பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தலைப்பில் தீர்வுப்பொதி தயாரிக்கப்பட்டது.

பின்னர் ரணில் விக்கிரமசிங்க காலத்தில் ஒஸ்லோ பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. மஹிந்த ராஜபக்ஷ 13பிளஸ் என்று குறிப்பிட்டமையோடு சர்வகட்சி அறிக்கையும் தயாரிக்கப் பட்டது. அதன் பின்னர் மைத்திரி – ரணில் கூட்டாட்சியில் புதிய அரசியலமைப்புக்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இவற்றில் கோட்டாபய கூட அரசியல் தீர்வு பற்றி இந்தியப் பிரதமருக்கு வாக்குறுதி அளித்துள்ளார். இவ்வாறான பின்னணியில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்காகவே நாம் எமது நிலைப்பாட்டைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றோம்.

விசேடமாக இந்தியா தமிழர்களின் விடயத்துடன் நீண்டகாலமாகத் தொடர்புபட்டுள்ளது என்ற அடிப்படையில் அவர்களுக்குள்ள தார்மீகக் கடமையை முன்னெடுக்குமாறு நாம் கோரியுள்ளோம். நாம் எமது மக்கள் வழங்கிய ஆணையை மீறாது, சரியான திசையில் பயணிக்கின்றோம். இதனை சில தரப்புக்கள் அரசியலுக்காக குழப்புவதற்கு முனைகின்றன. – என்றார்

# பலாலி விமான நிலையம் விரைவில் திறக்கப்படும்!

## யாழ்ப்பாணத்தில் பீரிஸ் தகவல்

இலங்கையில் கொரோனா தலைவிரித்தாடிய நிலையிலேயே யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டதாகவும் விரைவில் அதனைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை மூடுவதற்கு எந்தவித அரசியல் நோக்கங்களும் இல்லை. நாட்டில் ஏற்பட்ட கொரோனாச் சூழ்நிலை காரணமாக இலங்கையில் உள்ள அனைத்து விமான நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. அதே போல் யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையம் மூடப்பட்டிருந்தது.

தற்பொழுது ஏனைய சில விமான நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. அதே போல பலாலி விமான நிலையமும் திறக்கப்படும்.

தற்போது பலாலி விமான நிலையத்தில் சில திருத்த வேலைகள் செய்ய வேண்டி உள்ளன. குறிப்பாக ஓடுபாதை விரிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது. விமான சேவைகளுக்கான மேலும் பல அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் காரணமாக சற்று தாமதநிலை காணப்படுகின்றது. எனினும் அந்த வேலைகள் முடிந்த பின்னர் விரைவாக பலாலி விமான நிலையம் திறக்கப்படும் என்றார்.

### தரம் – 5 புலமைப்பரிசில் பெறுபேறு மிக விரைவில்!

2021 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படவுள்ளன எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு மாதம் மற்றும் 10 நாள்களுக்குள் முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல். எம்.டி. தர்மசேன தெரிவித் தார். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கடந்த 22ஆம் திகதி இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்களை நல்லாட்சி அரசு செய்தால் தப்பு; இந்த அரசு செய்யலாமா?

## ஐக்கிய மக்கள் சக்தியின் முஜிபுர் ரஹுமான் எம்.பி. கேள்வி




கொழும்பு, ஜன.31

நல்லாட்சி அரசாங்கம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதைப் பற்றிப் பேசிய போது, வெளிநாட்டு சக்திகளும், மேற்குலக நாடுகளும் விரும்பியதைச் செய்ய முயற்சிக்கின்றோம் என்று கூறியவர்கள் இன்று அதையே செய்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹுமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பு – மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தையில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித் துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளிநாட்டு தூதுவர்களிடம் பேசும் போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருகிறோம் என்று கூறினார். இந்நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும் என வெளிநாட்டு தூதுவர்களிடம் வெளிவிவகார அமைச்சர் கூறியபோது, நாட்டின் நீதி அமைச்சரோ மனித உரிமைகளைக் குறைக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

எமது நல்லாட்சி அரசாங்கம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதைப் பற்றிப் பேசிய போது, வெளிநாட்டு சக்திகளும் மேற்குலக நாடுகளும் விரும்பியதைச் செய்ய முயற்சிக்கின்றோம் என்றார்கள்.

இப்போது யார் இந்த திருத்தத்தை மேற்கொண்டது? பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களை வெளிவிவகார அமைச்சே வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சே அதனை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வருகின்றது. உண்மையில் அது நீதி அமைச்சரின் விடயம். ஆனால் நீதி அமைச்சர் கொண்டு வரவேண்டிய சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் கொண்டு வர முயற்சிக்கிறார். பயங்கரவாதச் சட்டத்தில் திருத்தம் செய்கிறோம் என்று வெளிநாடுகளுக்குச் செய்தி அனுப்ப முயற்சிக்கிறார்.

இது அரசின் இரட்டைக் கொள்கையைக் காட்டுகிறது. இந்த அரசாங்கத் தரப்பினர் எதிர்க்கட்சியில் இருந்த போது சொன்னது ஒன்று. இப்போது அதிகாரத்துக்கு வந்ததும் செய்வது வேறு. – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.01.2022இல் வெளியிடப்பெற்றது.